ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
|---|---|
| திகதி | 2018 நவெம்பர் 13 |

**இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினைச் செய்திருக்கிறது**

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளில், இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவு, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் ஏனைய குற்றங்களுடன் தொடர்பான விசாரணைகள் மற்றும் வழக்குத்தொடுத்தலுடன் தொடர்பான புலனாய்வு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக, 2018 நவெம்பர் 01ஆம் நாளன்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை இலங்கை மத்திய வங்கியில் செய்து கொண்டது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் திரு. ஏ. எச். கே. ஜெகத் சந்திரசிறி அவர்களும் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் திரு. டி. எம். ரூபசிங்க அவர்களும் தொடர்பான நிறுவனங்களின் சார்பில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் பணம் தூயதாக்கலுக்குகெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றிற்கான தேசிய இணைப்புக் குழுவின் தலைவருமான முனைவர் இந்திரஜித் குமாரசுவாமியின் முன்னிலையில் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

பணம் தூயதாக்கலும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலும் பன்னாட்டு ரீதியாக தொடர்புபட்ட நிதியியல் குற்றங்களாகும். இவை உள்நாட்டு மற்றும உலகளாவிய பொருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக விளங்கக் கூடும். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் அத்தகைய குற்றங்களை தடுப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும், வழக்கு தொடுப்பதற்கும் இன்றியமையாததாக விளங்கும் புலனாய்வு மற்றும் தகவல்களைத் திரட்டுவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவினை இயலுமைப்படுத்தும்.

நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் பொருட்டு நிதியியல் உளவறிதல் பிரிவு 37 வெளிநாட்டு இணைத்தரப்பினருடனும் அதேபோன்று இலங்கைச் சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், உள்நாட்டு அரசிறைத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், இலங்கைப் பொலிஸ், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு போன்ற ஏழு உள்நாட்டு அரச முகவர்களுடனும் ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்திருக்கின்றது.



மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் திரு. ஏ. எச். கே. ஜெகத் சந்திரசிறியும் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் திரு. டி. எம். ரூபசிங்க அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை கைமாற்றிக் கொள்கின்றனர். இந்நிகழ்வில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான தேசிய இணைப்புக் குழுவின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருமான முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி, இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர் திரு. எச். ஏ. கருணாரத்ன ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.